செ.வெ.எண்: 83 நாள்:29.08.2016

# புதுக்கோட்டை மாவட்டம் மண்புழு இயற்கை உரம் தயாரிக்கும் திட்டத்தில் தமிழகத்தில் முன்னோடி மாவட்டமாக திகழ்கிறது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் மண்புழு இயற்கை உரம் தயாரிக்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு ஊராட்சிகளில் வருமானத்தை பெருக்கும் வகையில் மண்புழு இயற்கை உரம் தயாரிக்க உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், வீரப்பட்டி ஊராட்சி, வீரப்பட்டியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.90000 மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட மண்புழு இயற்கைஉரம் தயாரிக்கும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

நமது மாவட்டத்தில் மண்புழு இயற்கை உரம் தயாரிக்கும் வகையில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் முதல் கட்டமாக 74 கிராம ஊராட்சிகளிலும், இரண்டாம் கட்டமாக 283 கிராம ஊராட்சிகளிலும் செயல்பட்டு வருகிறது. இந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படும் கிராம ஊராட்சிகளில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 1 ஊராட்சி தேர்ந்தெடுக்கப்பட்டு மண்புழு இயற்கை உரம் தயாரிக்கும் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. இந்த கொட்டகையில் 6 தொட்டிகள் அமைக்கப்பட்டு மண்புழு இயற்கை உரம் தயார் செய்யும் வகையில் மக்கும் இலை, தளைகள் மற்றும் சாணக்கரைசல் கொண்டு நிரப்பப்படும். 1 தொட்டிக்கு 3 கிலோ மண்புழுக்கள் ரூ.600 மதிப்பில் தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் மூலம் பெற்று வளர்க்கப்படுகிறது. இதன் மூலம் 30 நாட்கள் கழித்து சுமார் 1 டன் மண்புழு உரம் கிடைக்கப்பெறும்.

மேலும் இவ்வாறு கிடைக்கப்பெறும் மண்புழு இயற்கை உரம் 25 கிலோ பைகளில் அடைக்கப்பட்டு விவசாயிகளுக்கு 1 கிலோ ரூ.7 என்ற வகையில் வழங்கப்படும். இதன் கழிவு நீர் (வெர்மிவாஸ்) மிகச்சிறந்த கிருமிநாசினியாகும். இவை பாட்டிலில் அடைக்கப்பட்டு 1லி ரூ.10 என்ற வகையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதனை செடி மற்றும் பயிர்களில் தெளிக்கும் பொழுது பிற பூச்சிகள் தாக்காது. இத்திட்டத்தின் மூலம் கிராமங்கள் தூய்மையாவதுடன் பொதுமக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறுவதுடன் வருடம் முழுவதும் ஊராட்சிகளுக்கு வருமானம் வரப்பெறும். மேலும் இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துவதில் தமிழகத்தின் முன்னோடி மாவட்டமாக நமது மாவட்டம் திகழ்கிறது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்த ஆய்வின் போது திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திரு.சந்தோஷ்குமார், ஒன்றியக்குழுத்தலைவர் திருமதி.இளவரசிவசந்தன், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.து.பாஸ்கர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (முழுசுகாதார இயக்கம்) திரு.தனபால், பெரியார் மணியம்மை பல்கலைக்கழக தொழில்நுட்ப ஆலோசகர் திரு.பாண்டியன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**